

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (13.1.2026) சென்னை, கலைஞர் நூற்றாண்டு பூங்காவில், பல்வேறு விவசாய சங்கத் தலைவர்கள் மற்றும் நிர்வாகிகள் சந்தித்து, பொங்கல் திருநாளையொட்டி தங்களது வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொண்டு, விவசாயிகளின் நலனில் அக்கறை கொண்டு பல்வேறு திட்டங்களை சீரிய முறையில் செயல்படுத்திவரும் தமிழ்நாடு அரசிற்கு தங்களது நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொண்டனர். இந்நிகழ்வின்போது, அமைச்சர் .கே.என்.நேரு, எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், சட்டமன்ற உறுப்பினர் மரு. நா. எழிலன், வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் அரசு செயலாளர் பல்வேறு விவசாய சங்க தலைவர்கள், நிருவாகிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.



பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் முனைவர். அன்பில் மகேஸ் பொய்யாமொழி நேற்று முன்தினம் (12.01.2026) புதுதில்லி பன்னாட்டுப் புத்தகக் கண்காட்சியில் கலந்துகொண்டு சிறப்புரையாற்றினார். புதுதில்லி உலகப் புத்தகக் கண்காட்சி வரலாற்றிலேயே முதல்முறையாக, தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகத்தின் (TNTBESC) சார்பில் தமிழ்நாடு அரங்கு அமைக்கப்பட்டுள்ளது. இந்நிகழ்வில் தமிழ்நாடு அரசின் புதுதில்லிக்கான சிறப்பு பிரதிநிதி ஏ.கே.எஸ்.விஜயன், தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழக இணை இயக்குநர் சங்கர சரவணன் மற்றும் தமிழ்நாட்டின் முன்னணி 10 பதிப்பாளர்கள் பங்கேற்றனர்.

### இலங்கைக் கடற்படையினரால் சிறை பிடிக்கப்பட்ட

# தமிழ்நாடு மீனவர்கள் - படகுகளை விடுவிக்க - உரிய நடவடிக்கை மேற்கொள்வீர்!

## ஒன்றிய வெளியுறவுத்துறை அமைச்சருக்கு – முதல்வர் மு.க.ஸ்டாலின் கடிதம் மூலம் வலியுறுத்தல்!

சென்னை, ஜன. 14 –

இலங்கைக் கடற்படையினரால் சிறைபிடிக்கப்பட்ட மீனவர்களையும், அவர்களது மீன்பிடிப் படகுகளையும் உடனடியாக விடுவிப்பதற்கும், தமிழ்நாடு மீனவர்கள் மீண்டும் கைது செய்யப்படுவதைத் தடுத்து நிறுத்தவும், உரிய தூதரக நடவடிக்கைகளை மேற்கொள்ள வலியுறுத்தி ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சர் டாக்டர் எஸ். ஜெய்சங்கர் அவர்களுக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கடிதம் எழுதியுள்ளார்.

இராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த 10 மீனவர்கள் நேற்று (13.01.2026) இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ள நிலையில், தமிழ்நாடு மீனவர்கள் மீண்டும் கைது செய்யப்படுவதைத் தடுத்து நிறுத்தவும், இலங்கைக் காவலில் உள்ள தமிழ்நாட்டைச் சேர்ந்த அனைத்து மீனவர்களையும், அவர்களது மீன்பிடிப் படகுகளையும் விடுவிப்பதற்கும் உரிய தூதரக நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ள வலியுறுத்தி, தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சர் டாக்டர் எஸ். ஜெய்சங்கர் அவர்களுக்கு நேற்று (13.01.2026) கடிதம் எழுதியுள்ளார்.

அக்கடிதத்தில், அறுவடைத் திருநாளான பொங்கல் பண்டிகையையொட்டி, தமிழ்நாட்டு மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ள ஒரு துயரச் சம்பவம் தொடர்பாகவும், தொடர்ந்து அவர்கள் எதிர்கொண்டுவரும் இன்னல்கள் தொடர்பாகவும் ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவதாக முதலமைச்சர் அவர்கள் தெரிவித்துள்ளார்.

13.01.2026 அதிகாலையில், இயந்திரமயமாக்கப்பட்ட மீன்பிடிப் படகில் மீன்பிடிப்பதற்காக கடலுக்குச் சென்ற இராமநாதபுரத்தைச் சேர்ந்த 10 மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளதாகவும், தமிழ்நாட்டு மீனவர்கள் இதுபோன்று தொடர்ந்து கைது செய்யப்படுவதும், அவர்களின் மீன்பிடிப் படகுகள் சிறைபிடிக்கப்படுவதும் மிகுந்த கவலையளிப்பதாக அவர் தனது கடிதத்தில் வருத்தத்துடன் குறிப்பிட்டுள்ளார். மேலும், தற்போதைய நிலவரப்படி, சமீபத்தில் கைது செய்யப்பட்டவர்கள் உட்பட, இதுவரை மொத்தம் 83 மீனவர்களும், 252 மீன்பிடிப் படகுகளும் இலங்கைவசம் உள்ளதாகவும் முதலமைச்சர் அவர்கள் தனது கடிதத்தில் கோடிட்டுக் காட்டியுள்ளார்.

சிறைபிடிக்கப்பட்டுள்ள மீனவர்களின் குடும்பத்தினர் எதிர்கொள்ளும் துயரமான மற்றும் நிச்சயமற்ற தன்மையைக் கருத்தில் கொண்டும், பொங்கல் பண்டிகையினை தங்கள் குடும்பத்தினருடன் கொண்டாடிட ஏதுவாகவும், கைது செய்யப்பட்டுள்ள அனைத்து மீனவர்களையும், அவர்களது மீன்பிடிப் படகுகளையும் இலங்கை அரசு உடனடியாக விடுவித்திடவும், தொடர்ந்து இதுபோன்ற கைது நடவடிக்கைகளைத் தடுத்திடவும், ஒன்றிய அரசு உரிய தூதரக நடவடிக்கைகளை விரைந்து மேற்கொள்ள வேண்டுமென்று ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சர் டாக்டர் எஸ்.ஜெய்சங்கர் அவர்களை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வலியுறுத்திக் கேட்டுக் கொண்டுள்ளார்.



‘உயிர்மை’ பதிப்பகம் சார்பில் கவிஞர் மனுஷ்ய புத்திரன் எழுதிய ‘ஒருநாள் வசந்தம்’ நாவல் மற்றும் ‘யமுனா வாழ்ந்த வீடு’, ‘இந்த கோடை நம்மை பிரித்துவிடும்’, ‘நீ என் வாழ்வில் இருந்தாயா?” ‘கண்ணீரின்றி போய் வாருங்கள்’, ‘ஹாலோவீன் தினத்தில் நூலகத்தில் ஒரு பேய்’ ஆகிய 5 கவிதை நூல்கள் வெளியீட்டு விழா, நந்தனம் ஒய்எம்சிஏ மைதானத்தில் நடைபெற்று வரும் சென்னை புத்தகக் காட்சி சிந்தனை அரங்கில் நடைபெற்றது. இதில் தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி., இயக்குநர் கரு.பழனியப்பன், திரைக் கலைஞர் ரோகிணி, திரைக் கலைஞர் பிரியா பவானி சங்கர், எழுத்தாளர் பவா செல்லத்துரை, எழுத்தாளர் பாஸ்கர் சக்தி, ஊடகவியலாளர் சுகிதா சாரங்கராஜ், கவிஞர்கள் இசை, வெய்யில் ஆகியோர் பங்கேற்றனர்.

# கழக சிறுபான்மையினர் நல உரிமைப்பிரிவு சார்பில் - சமத்துவப் பொங்கல் விழா!

## செயலாளர் - டாக்டர்.அ.சுபேர்கான் தலைமையில் நடைபெற்றது!

சென்னை,ஜன.14-

சிறுபான்மையின மக்களின் உரிமைகளை காத்திடும் கழகத் தலைவர் முதல்வர் அவர்களின் நல்வழிகாட்டுதலின்படியும், துணை முதல்வர் அவர்களின் அறிவுறுத்தலின்படியும் கழக சிறுபான்மையினர் நல உரிமைப்பிரிவின் சார்பில் சென்னை இராயபேட்டையில் சமத்துவப்பொங்கள் விழா செயலாளர்டாக்டர்.அ.சுபேர்கான் தலைமையில்நடைபெற்றது.



இந்நிகழ்வில் கழக சிறுபான்மையினர் நல உரிமைப்பிரிவின் மாநில இணைச் செயலாளர் ஜெரால்டு, மாநில துணைச்செயலாளர்கள் அடையாறு சபீல் கான், கா.ரபி அகமது, ராபர்ட் ராஜதுரை சென்னை மேற்கு மாவட்ட அமைப்பாளர்எஸ்.எச்.ரகமத்துல்லா, மாவட்ட துணை தலைவர்முகமது அப்சல், ஜப்பார ஜலாலுதீன், விசாஸ் அலி கான், காசிம், அமானுல்லா, வடக்கு மாவட்ட அமைப்பாளர் எம்.ஆர்.டி.அப்துல் ரகுமான், துணை அமைப்பாளர்கள் டி.அசோக்ராஜ், யு. அனிபா, சென்னை கிழக்கு மாவட்ட அமைப்பாளர் பெரோஸ் கான், மாவட்ட துணை தலைவர் பால்மோகன், துணை அமைப்பாளர்கள் சந்தானராஜ், ஜான் ரூவில், இம்ரான், தென்மேற்கு மாவட்ட தலைவர் ஷேக் தாவூத், துணை அமைப்பாளர்கள் அலெக்ஸ், உத்திரியம், எஸ்.கே.நசீர், தெற்கு மாவட்ட தலைவர் கரிமுல்லா, துணை அமைப்பாளர் அன்புரோஸ், ஜெயபிரகாஷ், காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட அமைப்பாளர் நூருல் அமீன், மாவட்ட தலைவர் மகாவீர் ஜெயின், திருவள்ளூர் மத்திய மாவட்ட அமைப்பாளர் கரிகாலன் @ ஷாஜகான், துணை அமைப்பாளர் பாருக், திருவள்ளூர் மேற்கு மாவட்ட அமைப்பாளர் ஜி.சித்திக் அலி, துணை அமைப்பாளர் திரு.பாஷா, க.இ.மாத்தூர் பன்னீர்செல்வம், பகுதி கழக நிர்வாகிகள் வேளச்சேரி எஸ்.கே.நசீர், மயிலை சுலைமான், ரகுமான் கான், திருவல்லி க்கேணி ரசாக், பிலால், இராயபுரம் நூருல் அமீன், பழவை.ஹாஜா, மீஞ்சூர் சரவணன் ஆண்ரூஸ், மற்றும் பேராயர்கள் திரு.பர்ணபாஸ், திரு.போல் ஞானம், பாஸ்டர் ஜோஷ்வா, பாஸ்டர் வெஸ்லி, அருட்திரு. இரா. மேத்யூ, அருட்திரு.இளவரசன், அருட்திரு.லாரன்ஸ், அருட்திரு. சௌரி ராஜன், அருட்திரு. மேனுவேல் சுந்தர் சிங் மற்றும் ஏனைய கழக சிறுபான்மையினர் நல உரிமைப்பிரிவின் மாவட்ட, மாநகர, பகுதி, நகரம், பேரூர் மற்றும் ஒன்றிய கழக நிர்வாகிகள் திரளாக பங்கேற்று பொங்கல் விழாவினை சிறப்பித்தனர்.



சென்னை தெற்கு மாவட்டம், மதுரவாயல் வடக்குப் பகுதி, 147 வது வார்டில் வட்டக் கழகச் செயலாளர் மேட்டுக்குப்பம் லயன் எஸ்.ஜி.மாதவன் ஏற்பாட்டில் சமத்துவப் பொங்கல் விழா கொண்டாடப்பட்டது. இந்நிகழ்ச்சியில் மதுரவாயல் சட்டமன்ற உறுப்பினரும், சென்னை பல்கலைக் கழக ஆட்சி மன்றக் குழு உறுப்பினருமான காரம்பாக்கம் க.கணபதி பரிசுகளை வழங்கினார். இதில் வளசரவாக்கம், 11 வது மண்டலக் குழுத் தலைவர் நொளம்பூர் வே.ராஜன், 147 வது வார்டு மாமன்ற உறுப்பினரும், கல்வி நிலைக் குழு உறுப்பினருமான ரமணி மாதவன், பொதுமக்கள், கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.



வேளச்சேரி மேற்கு பகுதி 177வது வார்டில் உள்ள சென்னை மேல்நிலைப்பள்ளியில் தமிழ் புத்தாண்டு தைத்திருநாள் பொங்கல் விழாவை முன்னிட்டு பள்ளி தலைமைஆசிரியர் தலைமையில் சமத்துவ பொங்கல் விழா நடைபெற்றது. பள்ளி மாணவ, மாணவிகள் பல்வேறு கலை நிகழ்ச்சிகளை நடத்தினார்கள். வார்டு மாமன்ற உறுப்பினரும், கழக தேர்தல் பணிக்குழு செயலாளருமான வேளச்சேரி பெ.மணிமாறன் பங்கேற்று, மாணவ மாணவிகளுக்கு பொங்கல் பரிசுகளை வழங்கினார். இந்நிகழ்வில் பள்ளி ஆசிரியர்கள், மாணவ – மாணவியர்களின் பெற்றோர்கள், கழக நிர்வாகிகள் பக்தவச்சலம், க.பத்மராஜன், இ.ரவிச்சந்திரன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் பெருந்திரளாக பங்கேற்றனர்.

### எழும்பூர் தொகுதியில் இ.பரந்தாமன், எம்.எல்.ஏ. ஏற்பாட்டில்

# சமத்துவப் பொங்கல் விழா! விளையாட்டுப் போட்டிகள் - கலை நிகழ்ச்சிகள் - வீதி நாடகங்கள்!

## 500 பெண்கள், சிறுவர்–சிறுமியருக்கு மிக்ஸி, பிரஷர் குக்கர் உள்ளிட்ட பரிசுப் பொருட்களை வழங்கினார்!

*சென்னை, ஜன.14-*

*கழகச் சட்டத்துறை இணைச் செயலாளரும் எழும்பூர் சட்டமன்ற உறுப்பினருமான வழக்கறிஞர் இ.பரந்தாமன் ஏற்பாட்டில், புளியந்தோப்பு, கே.பி.பார்க் நகர்ப்புற வாழ்விடக் குடியிருப்பு வளாகத்தில் சமத்துவப் பொங்கல் விழா நடைபெற்றது.*

*இவ்விழாவினையொட்டி, கே.பி.பார்க் குடியிருப்பு வளாகத்திலும், தட்டான்குளம் அய்யாவு தெருவிலும் 500-க்கும் மேற்பட்ட பெண்களும் சிறுவர்-சிறுமியர்களும் கலந்து கொண்ட கோலப் போட்டி, இசை நாற்காலிப் போட்டி, ஓட்டப்பந்தயம், உறியடித்தல் உள்ளிட்ட பல்வேறு விளையாட்டுப் போட்டிகளும் பொங்கல் வைத்தலும் நடைபெற்றன.*

*கே.பி.பார்க் வளாகத்தில் நடந்த பரிசளிப்பு விழாவில் இவ்விளையாட்டுப் போட்டிகளில் முதலிடம் பெற்றவர்களுக்கு மிக்ஸி, இரண்டாம் இடம் பெற்றவர்களுக்கு பிரஷர் குக்கர், மூன்றாம் இடம் பெற்றவர்களுக்கு அயர்ன் பாக்ஸ் மற்றும் போட்டிகளில் கலந்து கொண்டவர்கள் அனைவருக்கும் ஹாட் பாக்ஸ் ஆகிய பரிசுகளைச் சட்டமன்ற உறுப்பினர் இ.பரந்தாமன் வழங்கினார்.*

*இப்பரிசளிப்பு விழாவின் தொடக்கத்தில் மாற்று ஊடக மையக் கலைக் குழுவின் சார்பில் திரளான பொதுமக்கள் முன்னிலையில் பறையாட்டம், ஒயிலாட்டம், மாடு-மயிலாட்டம், சிலம்பாட்டம், மரக்கால் ஆட்டம், கரகாட்டம் உள்ளிட்ட பல்வேறு கலைநிகழ்ச்சிகளும்; மகளிர் உரிமைத் தொகை திட்டம், புதுமைப் பெண் திட்டம், தமிழ் புதல்வன் திட்டம் உள்ளிட்ட திராவிட மாடல் அரசின் சாதனைகளை விளக்கும் வீதி நாடகங்களும் நடைபெற்றன.*

*இந்நிகழ்ச்சியில் அவைத் தலைவர் வெ.மருதன், மாவட்டப் பிரதிநிதிகள் மா.காந்தி,*



*கமலக்கண்ணன்; 108-வது வட்டத் துணைச் செயலாளர் கே.சீனிவாசன், அவைத் தலைவர் டி.விஸ்வநாதன், 77-வது வட்டத் துணைச் செயலாளர் வீ.கே.ரவி, 77 ‘அ’ வட்டத் துணைச் செயலாளர் ஆர். ஆரோக்கியம், எழும்பூர் தெற்குப் பகுதி இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் ஜெ.சிலம்பரசன், எல்.சுகுமாரன்; பகுதிப் பிரதிநிதிகள் முனுசாமி, மணிவண்ணன்; வட்டப் பொருளாளர் வெங்கட், எழும்பூர் வடக்குப் பகுதி மகளிர் தொண்டர் அணி துணை அமைப்பாளர் ஜெயலெட்சுமி, 108 ‘அ’ வட்ட இளைஞர் அணி அமைப்பாளர் பு.சதிஷ்குமார்; 108-வது வட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் ஜோ.சந்தோஷ்குமார்,*

*77-வது வட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் ச.சதீஷ், 58-வது வட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் வே.பா.ரோஹித்குமார், 58 ‘அ’ வட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் ராஜ்குமார், 78-வது வட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் வேலன்,*

*99 ‘அ’ வட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் குணா, முன்னாள் அவைத் தலைவர் கி.புஷ்பராஜ், பிரம்மதேவன், கோமகன், சரவணன், எட்டு, பாக முகவர் கவிதா, தர்மதுரை, குணசேகரன், அசினா பேகம், சத்யா, பி.எல்.சி. சீதா, சுந்தர்ராஜ், ரோஷன், கபிலன், எட்வர்ட் உள்ளிட்ட கழக நிர்வாகிகளும் செயல்வீரர்களும் கலந்து கொண்டனர்.*

### மு.க.தமிழரசு – நே.சிற்றரசு – தயாநிதி மாறன் – அன்பகம் கலை – நா.எழிலன் – வினோத் வேலாயுதம் பங்கேற்பு!

# 112வது வட்டத்தில் திராவிடப் பொங்கல் விழா!

## வட்டச் செயலாளர் வரதை த.பரி தலைமை!

*சென்னை, ஜன.14-*

*ஆயிரம் விளக்கு மேற்கு பகுதி 112வது வட்டச் செயலாளர் வரதை த.பரி விடுத்துள்ள வேண்டுகோள் வருமாறு :*

*தைத்திங்கள் முதல் நாள் தமிழ் புத்தாண்டு தமிழர்களின் திருநாள் மற்றும் பொங்கல் விழா கழகத் தலைவர் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க பொங்கல் விழா நாளை (15.01.2026 - வியாழக்கிழமை) காலை 9.00 மணி அளவில் டிரஸ்புரம், 6வது தெரு சந்திப்பில் நடைபெறுகிறது.*

*ஆயிரம் விளக்கு மேற்கு பகுதி வட்டச் செயலாளர் வரதை த.பரி தலைமையில் பொங்கலிட்டு பொங்கல் மற்றும் இனிப்பு வழங்கிறார்.*

*இதில் மு.க.தமிழரசு, சென்னை மேற்கு மாவட்ட செயலாளர் நே.சிற்றரசு, மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதிமாறன், அன்பகம் கலை, ஆயிரம் விளக்கு தொகுதி சட்டமன்ற உறுப்பினர் மருத்துவர் நா.எழிலன், ஆயிரம் விளக்கு மேற்கு பகுதி செயலாளர் வினோத் வேலாயுதம்*

*சென்னை மேற்கு மாவட்ட பொருளாளர் ஜே.எஸ்.அகஸ்டின் பாபு, பொதுக்குழு உறுப்பினர் டி.ஜோஸ் டேனியல், எம்.ஏ.ஜெஸ்டின், புவி பாலாஜி, என்.பி.இதயாத் பாட்சா, எலிசபத் அகஸ்டின் பாபு எம்.சி., எஸ்.பார்த்திபன், த.ஐசன்ட், எஸ்.மனோகரன், வி.பொன்சீலன், ஜெனரேட்டர் ராஜ், எஸ்.பொற்கொடி, வி.ராஜி, எஸ்.சக்கரவர்த்தி, எல்.முருகன், பி.பாலாஜி, பி. சிவா, இ.ஜான் மற்றும் மாவட்ட கழக அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள், இளைஞர் அணி பாகத் தலைவர்கள், மகளிர் அணி மற்றும் கழக முன்னோடிகள் அனைவரும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.*

*இவ்வாறு ஆயிரம் விளக்கு மேற்கு பகுதி வட்டச் செயலாளர் வரதை த.பரி வேண்டுகோள் விடுத்துள்ளார்.*

### தி.மு.க. இலக்கிய அணி

# திருவண்ணாமலை வடக்கு மாவட்ட துணை அமைப்பாளர் நியமனம்!

## தி.மு.க. இலக்கிய அணிச் செயலாளர் வி.பி.கலைராஜன் அறிவிப்பு!

திருவண்ணாமலை வடக்கு மாவட்ட இலக்கிய அணி துணை அமைப்பாளராக **எஸ். பாபு** (கொருக்காத்தூர் கிராமம், ஆரணி, திருவண்ணாமலை மாவட்டம்.) அவர்கள் நியமிக்கப்படுகிறார்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 10-01-2026.

**வி.பி.கலைராஜன் ,**
செயலாளர்
தி.மு.க. இலக்கிய அணி



கும்முடிப்பூண்டி கி.வேணு மற்றும் ஜி.சக்தி சோனியா நலன் அறக்கட்டளை சார்பில் கும்மிடிப்பூண்டி தொகுதி கவரப்பேட்டை அரசு மேல்நிலை பள்ளியில் படிக்கும் 50க்கும் மேற்பட்ட மாணவ மாணவியர்களை திருவள்ளூர் கிழக்கு மாவட்ட கழகத் துணைச் செயலாளர் கே.வி.ஜி.உமாமகேஸ்வரிவேணு ஏற்பாட்டில் மாவட்ட கழகப் பொறுப்பாளர் எம்.எஸ்.கே.ரமேஷ்ராஜ் தலைமையில் சென்னை நந்தனத்தில் நடைபெறக்கூடிய 49 வது புத்தகக் கண்காட்சிக்கு அறிவுச் சுற்றுலாவாக அழைத்துச் சென்று அரசு மாணவ மாணவியர்களுக்கு கல்வி புத்தகங்கள் உபகரணங்கள் போர்வை வழங்கப்பட்டது உடன் திமுக நிர்வாகிகள் உள்ளனர்.